12.02.2025 Mcop 308 of 2023 ம.சா.1 மேரி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் இறந்து போனது என் மகன். என் மகன் இலை கடையில் வேலை செய்தான். மாதம் ரூ.15ஆயிரம் சம்பளம் பெற்று வந்தார். என்மகனின் வேலை மற்றும் வருமானததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் ஆவார்கள். இரண்டு பெண் குழந்தைகளுக்கு திருமணமாகிவிட்டது. ஒரு ஆண் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. விபத்து நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயம் என் மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் அது என் மகனுக்கு சொந்தமானதாகும். என் மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து சமயம் என் மகனுக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. விபத்தில் எடுக்கப்பட்ட பாலிசியானது ஆக்ட்பாலிசி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாலிசியானது வாகனத்தை பயன்படுத்தாத நபர் தான் 3ம்தரப்பினர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காப்பீடு கழகத்தை பொறுத்து விபத்தில் இறந்த நபர் 3ம்தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல.விபத்துசமயம் என் மகன் தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தலைகவசம் அணியாமல் ஓட்டி சென்று தனக்கு தானே விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக என் கணவர் கொடுத்த புகாரின் பேரில் விபத்தில் இறந்து போன என் மகன் மீது தான் போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மகன் மீது தவறு இல்லை என மேற்படி குற்ற வழக்கை ரத்து செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை. என் மகன் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயம் எடுக்கப்பட்ட பாலிசியானது ஆக்ட்பாலிசிஎன்பதாலும், விபத்து சமயம் முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ஓட்டிசென்றதால் எதிர்மனுதாரர்

நிறுவனம்  இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மோ.வாகன சட்டபிரிவு 140,166ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் விபத்து யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை என்னை சார்ந்தது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.